

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், மலையம்பாக்கம் ஊராட்சியில், மலையம்பாக்கம் சுன்னத் வல் ஜமாத் பள்ளிவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர், ஆவடி சா.மு.நாசர் சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டு பள்ளிவாசலை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். உடன் நிர்வாகிகள் நடுகுத்கை கே.ஜே ரமேஷ், ஆவடி மேயர் உதயகுமார், நகர கழக செயலாளர் ஜி.ஆர் திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க. ஸ்ரீதர், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழக செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத் , பொன் விஜயன் மற்றும் கழக நிர்வாகிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள் பொதுமக்கள் இருந்தனர் .

# சிறுபான்மையின மக்களுக்கு எப்பொழுதும் தி.மு.க. அரசு பாதுகாப்பாக உள்ளது!

## பள்ளிவாசல் திறப்பு விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர் நவ.11:

பூவிருந்தவல்லி அடுத்த மலையம்பாக்கம் கிராமத்தில் பூவிருந்தவல்லி பெரிய பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் புதிய பள்ளிவாசல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் பெரிய பள்ளிவாசல் தலைவர் முஹம்மது ஹனீப் கௌஸ் தலைமை தாங்கினார். செயலாளர் ராஜா உசேன், பொருளாளர் சேக் பரீத், நிர்வாகிகள் மகபூப் பாஷா, அப்துல் ரசாக், அப்துல்சலாம், சதக் கத்துல்லா, யூனுஸ் இப்ராஹிம், ஆதம்ஷா, கலிம்அகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் மாஹீன் அபுபக்கர் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு புதிய பள்ளிவாசல் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இதில் அமைச்சர் நாசர் பேசும்போது,

இந்தியாவில் ஜாதி மதம் இனம் மொழி கலாச்சாரம் பண்பாடு என பல்வேறு வகையான மக்கள் இருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை என வாழ்ந்து வருகின்றனர். தற்போது நாடு முழுவதும் சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலான சூழ்நிலை நிலவி வரும் நிலையில் தமிழ்நாடு அரசு சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக உள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் சிறுபான்மையினருக்கும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சிறுபான்மையினருக்கு இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு பாதுகாப்பாக இருக்கிறதோ அதே அளவுக்கு சிறுபான்மையின மக்களும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு தர வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு வக்பு வாரிய முன்னாள் உறுப்பினர் நவாஸ், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்கைகே.ஜே . ரமேஷ், ஆவடி மேயர்உதயகுமார், நகரகழகசெயலாளர்ஜி.ஆர்திருமலை, நகரமன்றதலைவர்காஞ்சனாசுதாகர், துணைத்தலைவர்க. ஸ்ரீதர், மாநகரபொறுப்பாளர்சன்பிரகாஷ், பகுதிகழகசெயலாளர்கள்ஜி.நாராயணபிரசாத், பொன்விஜயன் பூந்தமல்லி பள்ளிவாசல் ஆலோசனைக் குழு உறுப்பினர் சேக்தாவூத், இமாம்கள் பூந்தமல்லி முஹம்மது இஸ்மாயில் பாகவி, பரணிபுத்தூர் முஹம்மது சலீம் சேட், மலையம்பாக்கம் முஹம்மது இம்ரான், மேப்பூர் தாஜுதீன் காஷிபி மற்றும் பல்வேறு பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், இஸ்லாமிய அமைப்புகளின் நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## S.I.R. ஐக் கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# மயிலை மேற்கு பகுதிக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி வேண்டுகோள்!

சென்னை, நவ. 11-

மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் இன்று (11.11.2025 - செவ்வாய்கிழமை) காலை 9 மணி அளவில் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் S.i.R சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக் கோரியும் ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறிய எதேச்சதிகாரப் போக்குடன் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் வாக்காளர் தீவிர மறுசீரமைப்பு ( SIR ) செயல்படுவதை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சேப்பாக்கம்

விருந்தினர் மாளிகை அருகில் நடைபெறுகிறது.

இதில் மயிலை மேற்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள்.பாகப் பொறுப்பாளர்கள், BLA2,BDO,BLC அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி கழகச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் (S.I.R)ஐ கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகத் தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் வேண்டுகோள்!

சென்னை, நவ. 11 -

அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு (S.I.R) யை எதிர்த்து சென்னை மேற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் முன்னிலையில் இன்று (11.11.2025 - செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணி அளவில் அண்ணா சாலை ALL INDIA TV ஸ்டேஷன் அருகில் சிவானந்தா சாலையில் நடைபெற உள்ளது.

மேற்கண்ட கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் அணிகளின் மாநில நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து கட்சிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள், BLA-2, BDA, BYA, BLC, பாக ஒருங்கிணைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கழகச் செயலாளர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்யுமாறு வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் 200 பேர் வீதம் வேன் மூலம் அழைத்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் தெரிவித்துள்ளார்.

# 38வது வட்ட கழக BLA2, BDA ஆலோசனைக் கூட்டம் !

## நேதாஜி யு.கணேசன் அறிக்கை !

சென்னை, நவ.11

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டசெயலாளரும் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் விடுத்துள்ள அறிக்கை அருமாறு :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 38வது வட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், BLA2, BDA, இளைஞர் அணி வட்ட அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள், கூட்டம் இன்று (11.11.2025 செவ்வாய்க் கிழமை) மாலை 5.00 மணியளவில் எண்.64. நேதாஜி நகர் 4வது தெரு (நாவலர் குடியிருப்பு அருகில்) SIR வாக்குப்பதிவு சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

கூட்டத்தில் 38வது வட்டத்திற்குட்பட்ட நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டசெயலாளரும் மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் அறிக்கையில் கூறியுள்ளார்.



தி.மு.க அமைப்பு சாரா ஓட்டுனர் அணி சென்னை தென்மேற்கு மாவட்டம் மு.க.ஸ்டாலின் ஆட்டோ நிறுத்தம் முண்டககண்ணியம்மன் கோவில் இரயில் நிலையம் புதிய ஆட்டோ நிறுத்தம் திறப்புவிழா மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைபடி மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, 121வது வட்ட செயலாளர் டி. ராஜவேலு முன்னிலையில், மாவட்ட அமைப்பாளர் ஏ.சத்தியமூர்த்தி, மாவட்ட தலைவர் ஈ.மூர்த்தி, மாவட்ட துணை அமைப்பாளர் த.சங்கர் ஆகியோர் தலைமையில் திறக்கப்பட்டது. இதில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சி தெற்கு மாவட்டம் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜீ. தம்பு தலைமை தாங்கி கிரிக்கெட் போட்டியை தொடங்கி வைத்தார். இதில் கலியுககண்ணதாசன், ஒன்றிய கவுன்சிலர்கள் சிலம்பரசன், தசரதன், சரத்குமார், சந்திரசேகர், தேவேந்திரன், ஹரிதாஸ், தங்கராஜ், ராதா, மாரியப்பன், ரகு, வினோத் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## டி.ஆர்.பாலு எம்.பி., இரா. முத்தரசன், தோழமைக் கட்சி தலைவர்கள் கண்டன உரை!

# சென்னை மேற்கு - தென்மேற்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் SIR -ஐ கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் – நே.சிற்றரசு – மயிலை த.வேலு எம்.எல்.ஏ., அறிவிப்பு!

சென்னை,நவ.11-

சென்னை மேற்கு - தென்மேற்கு மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடக் கோரியும், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்குடன் தமிழ்நாட்டில் SIR ஐ செயல்படுத்துவதையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில், நாளை (11.11.2025) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு, சென்னை





சிவானந்த சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் டி.ஆர். பாலு எம்.பி., இரா. முத்தரசன் உள்ளிட்ட தோழமைக் கட்சி தலைவர்கள் கண்டன உரையாற்றுகின்றனர்.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், சென்னை மேற்கு மற்றும் தென் மேற்கு மாவட்டங்களுக்குட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், தலைமைக் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி மற்றும் வட்ட நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டு, உங்கள் ஜனநாயகக் குரலை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, நவ. 11 -

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு (S.I.R) யை எதிர்த்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சென்னை தெற்கு மாவட்டக் கழக சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்கள் என அனைத்து நிலை இளைஞர்களின் நிர்வாகிகள் அனைவரும் இன்று (11.11.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு, சைதாப்பேட்டை, பொன்விழா வளைவு அருகில் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



இராயபுரம் சட்டமன்றத் தொகுதி 50வது வார்டுக்கு உட்பட்ட ஜி.எம்.பேட்டை பகுதியில், தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டப்பட்ட புதிய பூங்காவை ஐட்ரீம் இரா. மூர்த்தி திறந்து வைத்து, பார்வையிட்டார். பகுதி செயலாளர்கள் இரா. செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர்கள் ஆர்.வி.கணேஷ், சுரேஷ்குமார் எம்.சி. மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.


